பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 12 2025 THURSDAY 12 40 PM
ஆகாஷவாணி – செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- கடற்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- எந்தவொரு பிரச்சினை குறித்தும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க தயாராக உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக, கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- குழந்தை திருமண முறை ஒழிப்பு குறித்த 100 நாள் விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தை மத்திய அமைச்சர் திருமதி. அன்னபூர்னா தேவி இன்று தொடங்கி வைத்தார்.
- ஜெருசலேம் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் Arjun Erigaisi பட்டம் வென்றார்.

>>>>><<<<<

கடற்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்திய கடற்படை நான்கு பாகிஸ்தான் கப்பல்களை மூழ்கடித்ததை நினைவுகூரும் வகையில், ஒவ்வோராண்டும் டிசம்பர் 4ஆம் தேதி கடற்படை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் கடற்படை வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், கடல்சார் பாதுகாப்பிற்கும், நாட்டின் கடலோர மற்றும் கடல்சார் வணிக பதுகாப்பிற்கும்இந்திய கடற்படையின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் கடல்சார் வலிமைக்கு எடுத்துக்காட்டாக கடற்படை விளங்குவதாக கூறியுள்ளார்.

*பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்திய கடற்படை தீரத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் அடையாளமாக திகழ்வதாக தெரிவித்துள்ளார்.*

*ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பலில் கடற்படை வீரர்களுடன் தீபாவளி பண்டிகையை கொண்டாடியதையும் பிரதமர் நினைவுகூர்ந்துள்ளார்.*

*நடப்பாண்டு கடற்படை தின கொண்டாட்டங்களை, கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி, ஆளுநர் திரு. ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகர், மத்திய இணையமைச்சர்கள் திரு. சுரேஷ் கோபி, திரு. சஞ்சய் சேத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*இந்த தினத்தை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஆகியோரும் கடற்படை வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*இந்நாளையொட்டி, புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தில் கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி மரியாதை செலுத்தினால்.*

*>>>>><<<<<*

*சர்வதேச சிறுத்தைகள் தினத்தை ஒட்டி, அனைத்து வனஉயிரியல் ஆர்வலர்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் இன்று வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவில் சிறுத்தை இனத்தை பாதுகாக்கும் வகையில், கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.*

*நாட்டில் சிறுத்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், குஜராத் மாநிலம், Kuno தேசியப் பூங்காவில் சிறுத்தைகள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*எந்தவொரு பிரச்சினை குறித்தும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க தயாராக உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.*

*மாநிலங்களவையில் இன்று பேசிய அவர். எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைகள் குறித்து அரசு விவாதிக்க மறுப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்தார்.*

*மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே இதுதொடர்பாக எழுப்பிய குற்றச்சாட்டிற்கு பதிலளித்த அவர், மத்திய அரசு தொடர்ந்து, எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினை குறித்து விவாதித்து வருவதாக தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*இந்தியா - கனடா இடையேயான வர்த்தக உறவை மேம்படுத்தும் வகையிலான பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக நடைபெற்றதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.*

*சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கனடா வர்த்தக அமைச்சர் திரு. Sidhu-வுடன் காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையின் போது, இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் உயர்நிலை குழு ஒன்று அடுத்த ஆண்டு கனடா செல்ல முடிவு செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதியாண்டில், 7 புள்ளி நான்கு சதவீதமாக அதிகரிக்கக்கூடும் என்று அமெரிக்க கடன் மதிப்பீட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு நடவடிக்கை காரணமாக, நாட்டு மக்களின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளதாகவும், இதன்மூலம் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*>>>>><<<<<*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக, கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். பிரதமரின் தொலைநோக்குப் பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம், நாட்டின் வளர்ச்சியில் வடகிழக்கு மாநிலங்கள் முக்கியப் பங்காற்றி வருவதாகவும் தெரிவித்தார்.*

>>>>><<<<<

*குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ், இதுவரை 15 கோடி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மேலும் நான்கு கோடி வீடுகளுக்கு பாதுகாப்பான குடிநீர் இணைப்புகளை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.*

>>>>><<<<<

*குழந்தை திருமண முறையை ஒழிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் திருமதி. அன்னபூர்னா தேவி தெரிவித்துள்ளார்.*

*குழந்தை திருமண முறை ஒழிப்பு குறித்த 100 நாள் விழிப்புணர்வு பிரச்சார இயக்கத்தை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்துப் பேசிய அவர், இந்த இயக்கம் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.*

*இதன் மூலம், பெண் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.*

*குழந்தை திருமண முறை ஒழிப்புக்கு மத்திய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திருமதி. அன்னபூர்னா தேவி கேட்டுக் கொண்டார்.*

>>>>><<<<<

*பிரான்ஸ் உடனான உறவுகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சீன அதிபர் திரு. Xi Jin Ping தெரிவித்துள்ளார்.*

சீன தலைநகர் பெய்ஜிங்கில் பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோனுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார – வர்த்தக உறவுகளை வலுப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

>>>>><<<<<

அமெரிக்க பிரதிநிதிகள் குழுவின் கண்காணிப்புடன் இஸ்ரேல் - லெபனான் இடையேயான பேச்சுவார்த்தை, லெபனானின் Naqoura நகரில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம், இஸ்ரேல் – ஹிஸ்புல்லா இடையே ஏற்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் தொடர்ச்சியாக, இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இருப்பினும், இந்த பேச்சுவார்த்தை அமைதி மற்றும் இஸ்ரேலுடனான சுமுகமான உறவுக்கு வழிவகுக்கவில்லை என்றும் லெபனான் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகரில் இன்று கடும் குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா, ஒடிசா மாநிலங்களிலும் இதேநிலை காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்திலும் பனிமூட்டம் காணப்படும் என்று கூறியுள்ள வானிலை ஆய்வு மையம், கேரளா, கர்நாடகாவின் ஒரு சில பகுதிகள் மற்றும் தமிழகத்தின் வடகடலோரப் பகுதிகளிலும் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

>>>>><<<<<

ஜெருசலேம் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் Arjun Erigaisi பட்டம் வென்றார்.

இப்போட்டியின் இறுதிச் சுற்றில் அவர் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்தை வென்றார்.

>>>>><<<<<

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், Isharani Baruah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-13, 10-21, 21-11 என்ற செட்கணக்கில் Sreya Lele-யை வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவில் அனுபமா உபாத்யாயா-வும், கலப்பு இரட்டையர் பிரிவில் ரித்விக் கபூர் - ருத்விகா ஷிவானி இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

குவாலியரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Aryan Lakshmanan - Manish Suresh Kumar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-1 6-0 என்ற செட்கணக்கில் Hitesh Chauhan – Arjun இணையை வென்றது.

>>>>><<<<<

துனிஷியாவில் நடைபெற்று சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Manas Dhaamne காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

உலக கோப்பை இறுதி துப்பாக்கிச் சுடும் போட்டி, இன்று தோஹாவில் தொடங்குகிறது.

வரும் 9ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், Samrat Rana, Manu Bhaker, Suruchi Singh உள்பட 15 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.

>>>>><<<<<

துபாயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஸ்ரீவள்ளி ராஷ்மிகா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-2 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் Georgina – ஸ்விட்சர்லாந்தின் Valentina இணையை வென்றது.

>>>>><<<<<